திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அவரை எதற்காகக் கட்டி வைத்து அடித்தார்கள் என்று அந்தப் புகாரிலே சொல்லப்பட வில்லையா? அந்தப் புகாரில் என்னதான் சொல்லப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அந்தப் புகாரிலே எந்தவிதமான காரணமும் சொல்லவில்லை. அதில் காரணம் எதும் காணவில்லை. அடிபட்டவரே 10 பேர்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கின்றார். இதுதான் காரணம் என்று சொல்லவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன் : அந்த அதிகாரியே புகார் கொடுத்திருக்கிறார். அந்த அதிகாரியை எதற்காகக் கட்டிவைத்து அடித்தார்கள் என்று புகாரிலேயே சொல்லாதபோது, அதை எப்படிப் புகாராக எடுத்துக்கொள்ள முடியும்? புகாரில் இன்னின்ன காரணங்களுக்காக என்று சொல்லாவிட்டால், அதை எப்படிப் புகார் என்று சொல்ல முடியும் என்றுதான் நான் கேட்கின்றேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அவரைக் கட்டிவைத்து அடித்ததாக புகாரில் சொல்லியிருக்கின்றார்கள். அவருக்குக் கீழ் இருக்கின்ற ஊழியர்களை, அதிகாரிகளைப்பற்றி இப்படிப்பட்ட புகார் சொல்லியிருக்கின்றார்கள். அவ்வளவுதான் அதிலிருக்கின்றது. மேற்கொண்டு விசாரணை முடிந்த பிறகுதான் சொல்ல முடியும்.

Television Broadcasting Station

* 51. *Q.*—THIRU D. SANTOSHAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state the towns in the State where television broadcasting stations are proposed to be located ?

தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையம்.

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ழ்கீக்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

இம்மாநிலத்தில், தொலைக் காட்சி ஒலிபரப்பு நிலையங்கள் அமைக்கக் கருதியுள்ள நகரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சென்னை மாநகரில் தொலைக்காட்சி நிலையம் ஒன்று அமைய உள்ளது.

1973 நவம்பர் 22]

THIRU D. SANTOSHAM: Mr. Chairman, Sir, Madurai is the second largest city in our State and it has been the cultural capital of Tamil Nadu since time immemorial. All these years, it has not had the advantage of having a radio broadcasting station. At least when television is introduced, will Madurai be considered for installing a television broadcasting station ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, ஏற்கெனவே இதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு 6 இடங்களிலே நிறுவலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த இடங்கள் எந்தெந்த மாவட்டம் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. அப்படி முடிவு செய்யப்படுகின்ற நேரத்தில், மதுரை மாவட்டத்தைப்பற்றியும் கவனிக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, 6 இடங்களில் நிறுவலாம் என்று சொல்லுகின்றார்கள். அது தொலைக் காட்சி நடத்தக்கூடிய ஸ்டேஷன் என்று சொல்வார்களே அதுவா அல்லது பூஸ்டர் என்று சொல்வார்களே அதுவா என்று அறிய விரும்புகிறேன். அந்த ஆறு இடங்களிலும் ஸ்டேஷன் நிறுவப்படப்போகின்றதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, மாவட்டத்திலே என்றால், சென்னை மாவட்டம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியங்களிலும், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடங்களிலும், பள்ளிகளிலும் சென்னையிலுள்ள தொலைக் காட்சி நிலையங்களிலும் செயல்படவிருக்கின்றது. அது பற்றிய விவரமான அறிக்கை தற்போது இல்லை.

Development of Roads under the Rural Highways Scheme.

* 52. *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) the names of the roads proposed to be developed by the Government under the Rural Highways Scheme in North Arcot district; and

(*b*) the estimated expenditure therefor ?